


**மனைப்பிரிவு சாலைப்பரப்பு:**

| | |
|---|---|
| 1.(161.22+154.26)/2 x 10.00 | = 1577.40 ச.மீ |
| 2.(29.13+29.45)/2 x 9.00 | = 263.61 ச.மீ |
| 3.(31.16+30.75)/2 x 9.00 | = 278.60 ச.மீ |
| 4.(33.02+32.68)/2 x 7.20 | = 236.52 ச.மீ |
| 5.(21.27+21.35)/2 x 9.00 | = 191.79 ச.மீ |
| மூலைமுடுக்கு | |
| ((1.5x1.5)/2) x 8 | = 9.00 ச.மீ |
| ((4.5x1,5)/2) x 2 | = 6.75 ச.மீ |
| மொத்தப்பரப்பு | = 2563.67ச.மீ |

**மின்பகிர்மானம்**

((10.66+10.70)/2) x ((3.18+3.54)/2)= 35.88 ச.மீ
=0.52%

**பொது உபயோகம்**

((10.69+10.70)/2) x ((3.90+3.54)/2)= 39.79 ச.மீ
= - 1.125ச.மீ
=38.67 ச.மீ
=0.56%

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

## இக்கரைநெகமம் ஊராட்சி

## சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இக்கரைநெகமம் கிராமம் மற்றும் ஊராட்சி, க.ச.எண்.106/1A2B, 106/1C, 106/2A1B மற்றும் 106/2B -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாத பகுதி)

அளவு : 1 அங்குலம் = 33 அடி ( 1:400) ( ALL DIMENSIONS ARE IN METER)

Online Application No : KASIF2N9

<u>குறிப்பு:</u>

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | - 2.34 ஏக்கர் (அ) 9479.00 ச.மீட்டர் |
| கோரிய மனைகள் | - 29 |
| ஒதுக்கிய மனைகள் | - 29 |
| மனைப்பிரிவின் எல்லை | - |
| நிலையிலுள்ள சாலை | - |

வ

<u>உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:</u>

| | |
|---|---|
| மனைப்பிரிவின் சாலை | : 2563.67 ச.மீட்டர் |
| பூங்கா | : (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 10% |
| | : (9479.00 - 2563.67) x 10% = 691.533 ச.மீ (10.00%) |
| | (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது.) |
| பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு தேவையான பரப்பு | : (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 1% |
| | : (9479.00 - 2563.67) x 0.5% = 34.58 ச.மீ |
| பொது உபயோகம் - (A) | : 38.67 ச.மீட்டர் (0.56%) |

<u>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு ஒதுக்கிய பரப்பு:</u>

| | |
|---|---|
| பொது உபயோகம் - (B) | :35.88 ச.மீட்டர் (0.52%) |

சாலை, பொது உபயோகம் - (A) மற்றும் பொது உபயோகம் - (B) தான ஆவண எண். 8026/2023 நாள் 03-11-2023 - ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

<u>கட்டிட வரம்பு:</u>

9.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ விடப்படல் வேண்டும்

9.00மீ-க்கு மேல் 18.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.00மீ விடப்படல் வேண்டும்

<u>மூலை முடக்கு:</u>

12.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்படல் வேண்டும்

12.00மீ முதல் 30.50மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.50மீ x 4.50மீ விடப்படல் வேண்டும்

<u>நிபந்தனைகள்:</u>

1. அரசாணை எண். 18 ந.நி மற்றும் கு.நீ.வ துறை நாள். 04.02.2019 ன் படி (ம) அரசாணை எண். 16 ந.நி மற்றும் கு.நீ.வ துறை நாள். 31.01.2020 ன் படி மனைப்பிரிவு சாலை மற்றும் 0.5% பூமி உள்ளாட்சிக்கும், 0.5% பூமி TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. அரசாணை எண். 181 வீ.வ மற்றும் ந.வ.து நாள். 09.12.2020 - ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவற்றை உள்ளாட்சியின் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3.அரசாணை எண். 141 வீ.வ மற்றும் ந.வ.து நாள். 16.07.2022 - ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்ததுறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் தலைவர், இக்கரைநெகமம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவுப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படல் வேண்டும்

7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

8. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

9. மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த மின்னழுத்த கம்பிபாதையை சாலையின் போக்கின் ஏற்ப மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றியமைக்கப்பட வேண்டும்

10. மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த அழுத்த மின் கம்பிபாதையை சாலையின் போக்கிற்கு மாற்றி அமைத்த பின்னரே (அ) நீக்கிய பின்னரே மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்

11. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்து பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்

12. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதி மன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல

13. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமைக்கும் வகையில் சுற்றுச்சுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

**SWP / DTCP / ERODE / LAYOUT APPROVAL NO : 456 / 2023**

| | |
|---|---|
| அளவர் / உதவி வரைவாளர் | [signature] |
| வரைவாளர் நிலை - III | [signature] |
| மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை - II | [signature] |

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Erode
Date:2023.11.09 16:22:54

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்